2.4.2025
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**2025 பினாங்கு நீர் விநியோக எச்சரிக்கை: தெலுக் பஹாங் அணையின் செயல்திறன் 50%-க்கும் குறைவாகயுள்ளது**

- **ஆயிர் ஈத்தாம் அணை: 31.3.2025 அன்று 55.7%**
- **PBAPP, அணைகளின் சேவைப் பகுதிகளில் உள்ள நீர் பயனீட்டாளர்கள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்த அவர்களின் புரிதலையும் ஒத்துழைப்பையும் நாடுகிறது,**

பினாங்கு, புதன், 2.4.2025: பினாங்கு தீவில் உள்ள 2 அணைகளின் பயன்படுத்தக்கூடிய கொள்ளளவு 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கணிசமாகக் குறைந்துள்ளது. இந்நிலை சம்பந்தப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் (WCAs) மீண்டும் மழைப் பொழியாததால் ஏற்படுகிறது .

31.3.2025 நிலவரப்படி அணைகளின் நிலையை பின்வரும் அட்டவணை சுருக்கமாகக் கூறுகிறது:

| அணை | பயனுள்ள கொள்ளளவு 1.1.2025 | பயனுள்ள கொள்ளளவு 31.3.2025 | பயனுள்ள கொள்ளளவு வேறுபாடு |
|---|---|---|---|
| தெலுக் பஹாங் அணை | 61.7% | 47.3% | - 14.4% |
| ஆயிர் ஈத்தாம் அணை | 76.7% | 55.7% | - 21% |

இதற்கிடையில், ஒரு வருடத்தின் முதல் காலாண்டில் அந்தந்த அணைகளின் WCA-க்களில் பதிவு செய்யப்பட்ட மழைப்பொழிவின் வரலாற்றுத் தரவு பின்வருமாறு:

| WCA இல் மழைப்பொழிவு | 2017 - 2019 3-ஆண்டு சராசரி | 2020 - 2024 5-ஆண்டு சராசரி | 2025 |
|---|---|---|---|
| தெலுக் பஹாங் அணை | 1,037mm | 262mm | 307mm |
| ஆயிர் ஈத்தாம் அணை | 553mm | 185mm | 122mm |

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

## தெலுக் பஹாங் அணை

2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில், அதன் முதல் காலாண்டில் தெலுக் பஹாங் அணையின் WCA இல் பதிவான சராசரி அளவுகோல் (அல்லது "சாதாரண") மழைப்பொழிவு 1,037 மி.மீ ஆகும். இது அடுத்தடுத்த 5 ஆண்டுகளில் (2020 - 2024) சராசரியாக 262 மிமீ ஆகக் குறைந்தது, இது தொடர்ச்சியான எல் நினோ சம்பவத்தால் ஏற்பட்டது.

2025 ஆம் ஆண்டில், PBAPP தெலுக் பஹாங் அணையின் WCA இல் சற்று அதிகமான மழைப்பொழிவைப் பதிவு செய்தது. ஆயினும், மழைப்பொழிவு போக்கு இன்னும் கோவிட்-19க்கு முந்தைய நிலைக்கு மாற்றம் காணவில்லை

மேலும், இந்த ஆண்டின் தொடக்கத்தில், தெலுக் பஹாங் அணை நிரம்பவில்லை. அதன் செயல்திறன் கொள்ளளவு 1.1.2025 அன்று 61.7% ஆக இருந்தது.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து PBAPP இந்த 18,240 மில்லியன் லிட்டர் (ML) அணையிலிருந்து தினசரி நீர் விநியோகம் ஒரு நாளைக்கு 60 மில்லியன் லிட்டர் (MLD) ஆகக் குறைந்து வருகிறது. அதன் WCA-வில் குறைந்த மழைப்பொழிவு இருந்தபோதிலும், கடந்த 90 நாட்களில் அதன் செயல்திறன் மிக்க கொள்ளளவு 14.4% மட்டுமே குறைந்ததற்கு இதுவே முக்கியக் காரணமாகும்.

## ஆயிர் ஈத்தாம் அணை

1.1.2025 முதல், 2,159 ML ஆயிர் ஈத்தாம் அணையின் பயனுள்ள கொள்ளளவு சுமார் 21% குறைந்துள்ளது. 1.1.2025 முதல் PBAPP அதன் WCA இல் 122 மிமீ மழைப்பொழிவை மட்டுமே பதிவு செய்துள்ளது, இது கடந்த 8 ஆண்டுகளில் ஆயிர் ஈத்தாம் WCA இல் மழையின் மிகக் குறைந்த அளவீடு ஆகும்.

ஆயினும்கூட, ஆயிர் ஈத்தாம் அணை செயல் திட்டம் 2025 (AIDAP 2025) செயல்படுத்துவதன் மூலம் PBAPP இந்த அணையை "பாதுகாக்கிறது":

- தினசரி நீர் விநியோகத்தை 11 MLD முதல் 22 MLD வரை கட்டுப்படுத்துதல்;
- செபராங் பிறையில் உள்ள சுங்கை டுவா WTP இலிருந்து 33 MLD வரை சுத்திகரிக்கப்பட்ட நீரை அணையின் சேவைப் பகுதிக்குள் செலுத்துதல்; மற்றும்
- ஆயிர் ஈத்தாம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட நீர்

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

உற்பத்தியை மேம்படுத்துதல், முதன்மையாக 2 பிற நீர் ஆதாரங்களில் (மெயின்ஸ் ஸ்ட்ரீம் மற்றும் டாட்ஸ் ஸ்ட்ரீம்) இருந்து மூல நீர் கிடைக்கும் தன்மையை அடிப்படையாகக் கொண்டது.

**விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD)**

இதற்கிடையில், மத்திய செபராங் பிறையில் உள்ள 86,400 ML விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையின் (EMD) திறன் 31.3.2025 அன்று 92.4% இல் "உறுதியாக" உள்ளது.

சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (WTP) சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்திக்கு EMD தற்போது "stand-by" அல்லது "back-up" அணையாக செயல்படுகிறது என்பதை நினைவில் கொள்ளவும். "தினசரி அணைகள்" ஆன தெலுக் பஹாங் அணை மற்றும் ஆயிர் ஈத்தாம் அணையைப் போல் இல்லாமல், PBAPP சுங்கை மூடாவிலிருந்து போதுமான மூல நீரை எடுக்க முடியாதபோது மட்டுமே EMD இன் இருப்புக்கள் குறைக்கப்படுகிறது.

**சுங்கை மூடா**

சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உகந்த சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தியை ஆதரிப்பதற்காக, 2025 மார்ச் மாதத்தில் சுங்கை மூடாவிலிருந்து போதுமான அளவு மூல நீரை PBAPP தொடர்ந்து பயன்படுத்துகிறது.

இருப்பினும், மார்ச் 2025 இல் 7 நாட்களுக்கு பினாங்கின் லஹார் தியாங் இருப்பில் சுங்கை மூடா நதியின் நீர்மட்டம் “2.0 மீட்டர் பாதுகாப்பான குறியீடாக” குறைந்தது. 31.3.2025 நிலவரப்படி, ஆற்றின் நீர்மட்டம் 2.4 மீட்டராக இருந்ததாகக் கூறப்படுகிறது.

**மேக விதைப்பு**

2025, ஏப்ரல் மாதத்தில் தெலுக் பஹாங் அணை மற்றும் ஆயிர் ஈத்தாம் அணையின் நிலைகளை PBAPP தொடர்ந்து கண்காணித்து, தினசரி நீர் விநியோக சேவைகளில் இடையூறு ஏற்படாமல் முடிந்தவரை தினசரி நீர் எடுப்புகளை மேலும் கட்டுப்படுத்தும்.

பினாங்கு மாநில அரசின் ஆதரவுடன், 2 தீவு அணைகளின் WCA-களில் மேக விதைப்பு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் (NADMA) மற்றும் மலேசிய விமானப்படை (RMAF) ஆகியவற்றின் உதவியை நாங்கள் நாடுவோம்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
Meeting all your water supply needs

தெலுக் பஹாங் அணையின் செயல்திறன் கொள்ளளவு 40%-ஐ விடக் குறைவதற்கு முன்பு NADMA மற்றும் RMAF செயல்படும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும், இப்போது பருவமழைக்கு இடைப்பட்ட காலமாகும், அதேவேளையில், வானத்தில் மேகங்கள் உருவாகும்.

**நீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும்**

தெலுக் பஹாங் அணை மற்றும் ஆயிர் ஈத்தாம் அணையின் மீதமுள்ள இருப்புக்களை "பாதுகாப்பதில்" மற்றொரு முக்கிய அம்சம் நீர் பயன்பாட்டைக் குறைப்பதாகும். 2 அணைகளின் சேவைப் பகுதிகளில் மொத்தமாக சுமார் 67,000 நீர் பயனீட்டாளர்கள் உள்ளனர்.

எனவே, பின்வரும் பகுதிகளில் உள்ள அனைத்து நீர் பயனீட்டாளர்களும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு அன்பான ஆதரவையும் ஒத்துழைப்பையும் PBAPP எதிர்ப்பார்க்கிறது:

| தெலுக் பஹாங் அணை சேவைப் பகுதிகள் | | ஆயிர் ஈத்தாம் அணை சேவைப் பகுதிகள் | |
|---|---|---|---|
| 1. | தெலுக் பஹாங் | 1. | ஆயிர் ஈத்தாம் |
| 2. | பத்து பிரிங்கி | 2. | பார்லிம் |
| 3. | தஞ்சோங் பூங்கா | 3. | பாயா தெருபோங் |
| 4. | தஞ்சோங் தோக்கோங் | | |

மேலும், பயனுள்ள நீர் சேமிப்பு குறிப்புகளுக்கு www.pba.com.my அகப்பக்கத்தைப் பார்வையிடவும். நமது அணைகள் நிரப்ப போதுமான மழைப் பெய்யும் வரை நீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும்.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Section

மின்னஞ்சல் : comms@pba.com.my